கதிர்காமத்திற்கு செல்லும் பாதையில் குமுக்கன் பதியில்
அமர்ந்து அருள்புரியும் கருமாரி அம்மன் மீது பாடப்பட்ட

# காவடிச் சிந்து - 2018



ஆக்கம்
சுப்பிரமணியம் கருணாகரன்
அம்பிளாந்துறை (கல்லடி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# காவடிச்சிந்து

## 02.07.2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓம் செஞ்சடைப் பெருமான் சற்குரு நாதர்
சடையப்பா சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சற்குரு நாதர் சடையப்பா சுவாமிகள்
வழிவந்த அப்பாஜி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

கிழக்கு மாகாணத்தை நோக்கும் போது எத்தனையோ புகழ்பூத்த திருத்தலங்கள் காணப்படுகின்றன ஒவ்வொரு தளத்துக்கும் காவியங்கள் வெளியாகிக் கொண்டிருப்பதை நாங்கள் அறிந்தவிடயம். நவீனயுகம் கொடிகட்டிப் பறக்கும் இக்காலகட்டத்தில் பக்தியோடு பாமாலைகளை தந்துகொண்டிருக்கும் அம்பிளாந்துறையை சேர்ந்த திரு சுப்பிரமணியம் கருணாகரன் அவர்கள் போற்றப்பட வேண்டியவர். குமுக்கனில் அமர்ந்து அருள்புரியும் கருமாரி அம்மன் மீது இவர் எழுதி இருக்கும் பாடலை நோக்கும்போது இவர் அம்மன் மீது கொண்டுள்ள பக்தியை நாம் அறிந்து கொள்ள முடிகின்றது. எனவே இவர் இவ்வாறான பல பக்திப் பாமாலையை எங்களுக்கு தரவேண்டும் என கேட்டுக் கொள்வதோடு இவர் மனதில் மலர்கின்ற பாடல்களை மனதோடு வைத்துக் கொள்ளாமல். அவற்றை எழுதி அவரே புத்தக வடிவமாக்கி அடியார்களின் கையில் கொடுப்பது மிகவும் பெருமைக்குரிய விடயம் ஆகவே இவருக்கும் இவரது குடும்பத்தினருக்கும் எப்போதும் மாமாங்கப்பிள்ளையார் மற்றும், ஆதிபராசக்தியின் அருள் கிடைக்க வேண்டுமென மனதார ஆசி வழங்குகின்றேன்.

**வேதாகம உதயசூரியம்**
சிவஸ்ரீ ஆதி சௌந்தராஜக் குருக்கள்
தர்மசாஸ்தா குருகுலம். இனுவில், யாழ்நகர்
பிரதமகுரு மாமாங்கேஸ்வரர் ஆலயம், மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

திருவாளர் சுப்பிரமணியம் கருணாகரன் அவர்கள் பட்டதாரிகளுக்கான நியமனம் வழங்கப்பட்டபோது முதலில் ஆசிரியராக பணிபுரிவதற்காக சிலகாலம் என்னோடு இணைந்து கொண்டார் அவரை அன்புடன் வரவேற்று வேலைகளை வழங்கியபோது அவருள் பொதிந்து கிடந்த திறமைகளை நன்கறிந்தேன் மாணவர்களுக்கான மதிப்பு மிக்க ஆசானாக திகழ்ந்தார். இறைநம்பிக்கையும் சமூக அக்கறையும் அவருள் அதிகமாகவே காணப்பட்டன. பின்தங்கிய மாணவர் களுக்கு பிரத்தியேக வகுப்புக்களை நடாத்தி அவர்களை உயரடைய செய்தவர். அன்றில் இருந்து இன்று வரை எனது உள்ளத்தில் மதிப்புமிக்க ஒரு நண்பனாக காணப்படுகின்றார்.

முருகப்பெருமானின் பக்தனாக இவர் வருடம்தோறும் இறையருள் மேலீட்டால் தலயாத்திரைகள் மேற்கொள்வது தனிச்சிறப்பு இறையடியார்கள் மீதும் அதிகளவான அன்பு கொண்டு அவர்களையும் சிறப்பாக வழிநடத்துபவர் முருகன் மீது எப்போதும் பதிகங்கள்பாடி மகிழ்விப்பதோடு மட்டும் இருந்துவிடாது அம்மன் ஆலயங்கள் தோறும் சென்று பாடல்கள் பாடி மகிழ்விப்பவர் மட்டக்களப்பு இலுப்படிச்சேனையின் மாரித்தாய் மீது பாடப்பட்ட காவடிச்சிந்து மாமாங்க தலயாத்திரையின் பெயரில் பாடப்பட்ட காவடிச்சிந்து போன்றவற்றின் வரிசையில். கதிர்காம தலயாத்திரையின் போது குமுக்கன் என்ற பகுதியில் எழுந்தருளி அருள்புரியும் **"கருமாரிஅம்மன் மீது பாடப்பட்ட காவடிச்சிந்து"** என்னும் பாமாலையினை பக்த அடியார்களுக்காக தருகின்றமையானது சிறப்பான அம்சமாகும்.

காவடிச்சிந்து பாமாலையானது மருவி வரும் இக்காலத்திலே எதிர்கால சந்ததிக்காக இவ்வடிவத்தை பக்திமயமாக புது மெருகுடன் படைத்து எமக்காக அளிக்கின்றமையானது முற்போக்கான சிந்தனையாகும். குமுக்கன் கருமாரித் தாய்க்கு பதிகம் இல்லாதிருந்த குறையினை நன்கறிந்து **"கருமாரி அம்மன்மீது பாடப்பட்ட காவடிச்சிந்து"** என்ற பதிப்பினை எமக்காக தருகின்றமை எல்லோராலும் முடியாத காரியமாகும். எனவே இவரது அழியாப் படைப்புக்கள் வரலாற்று சாதனை படைக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இவரது பணி சிறக்க வாழ்த்துரை வழங்குவதால் நானும் பேறு பெற்றவனாவேன். வாழ்க வளமுடன்.

**திரு. ச.சந்திரகுமார் (அதிபர்)**
மட்/விபுலானந்தா கல்லூரி கருவேப்பங்கேணி, மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை



குமுக்கன் ஆற்றோரம் குதூகலமாய் அமர்ந்த தாயே
வழிதவறும் அடியார்க்கு வழிகாட்டும் வைஷ்ணவியே
சங்கடங்கள் போக்கும் சாம்பவியும் நீயம்மா
சொல்லிலே சரம் தொடுத்து கருமாரியை துதித்திடுவோம்

எல்லாம் வல்ல முருகப் பெருமானை வேண்டி அடியார்கள் அனைவருக்கும் வணக்கத்தினை தெரிவித்துக் கொண்டு அன்னை கருமாரி அம்மன் புகழ்மாலை யினை வெளியிடுவதை இட்டு மகிழ்ச்சி அடைவதோடு இவ்வாறான பாமாலையினை வெளியிடுவதற்கு எனக்கு பிள்ளையார் சுழி போட்டவர் மாமாங்க பாதயாத்திரையின் குரு அப்பாசாமி அவர்களே.

கதிர்காம பாதயாத்திரை முடிவுற்று கதிர்காம புண்ணிய பூமியில் அமர்ந்து இருக்கும் போது ஒரு அடியார் என்னிடம் வந்து சடையப்ப சுவாமியால் எழுதப்பட்ட **"ஏழுமலை வாழும் முருகேசனே ஏழைக்கு இரங்குமய்யா"** எனும் பாடலை எழுதித்தாருங்கள் என வேண்டினார் எனக்கு அப்பாடல் தெரியாது சுவாமி என்றேன் அப்படியானால் அப்பா சுவாமியிடம் கேட்டு எழுதித் தாருங்கள் என்றார் நானும் அப்பா சுவாமியிடம் சென்று விடயத்தினை தெரிவித்தேன் அப்போது அவர் என்னை பார்த்து முதலில் பிள்ளையார் சுழியை போட்டுக் கொள்ளுங்கள் என்றார் அதன் பின் அப்பாடலை அவர் சொல்ல நான் எழுதி அந்த அடியாரிடம் கொடுத்தேன்.

அத்தோடு கதிர்காமம் முடிவுற்று எனது வீட்டுக்கு வந்து சில மாதங்களுக்கு பின் இப்பாடல்கள் எனது மனதில் மலரத் தொடங்கின. அப்பாடல்களை சரமாக தொடுத்து உங்கள் கைகளில் தவழ விடுகின்றேன் இவற்றுக்கெல்லாம் எல்லாம் வல்ல முருகப்பெருமானின் மகிமையும். அன்னை ஆதிபரா சக்தியின் அருளுமே காரணம்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

எனது அன்பு அடியார்களே.

வருடம் வேகமாக ஓடிக்கொண்டிருக்கின்றது மக்களெல்லாம் நாகரிகத்தின் பின்னால் சென்றுகொண்டிருக்கின்றார்கள். இக்காலகட்டத்தில் இதுபோன்ற பாதயாத்திரையே ஆன்மீகத்தின் பாதையில் செல்வதற்கு வழிவகுக்கின்றது.

எனவே அன்னை ஆதிபராசக்தியின் அருளும் கதிர்காமக்கந்தனின் மகிமையுமே இவ்வாறான புகழ் மாலையினை என்னால் வெளியிட முடிந்தது. நான் ஒரு கவிஞனும் அல்ல எழுத்தாளனும் அல்ல எனது மனதில் மலர்ந்ததை சரமாக தொடுத்து உங்கள் கைகளில் தருகின்றேன். வறுமையிலும் நல்வழி காட்டிய எனது அன்னை திருமதி கருணையம்மா சுப்பிரமணியம் அவர்களுக்கும் தந்தையை இழந்து தவித்த போது தோள் கொடுத்த எனது மாமா (வேலாப்போடி கந்தசாமி சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பட்டிப்பளை பிரதேச செயலகம்) அவர்களுக்கும் கதிர்காமக்கந்தனின் அருள் கிடைக்க வேண்டுவதோடு.

**எனது வெளியீடுகளாக.**

1. மட்டக்களப்பு இலுப்படிச்சேனையில் அமர்ந்து அருள் புரியும் மாரியம்மன் மீது பாடப்பட்ட காவடிச்சிந்து.- 29.06.2017
2. மாமாங்க பாதயாத்திரையின் பெயரில் பாடப்பட்ட காவடிச்சிந்து - 07. 2017

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல்

1. அவல் கடலைப் பிரியனே வாருமப்பா
அனுதினம் உன்னையே வேண்டுகின்றேன்
உன் அன்னை கருமாரி புகழைப்பாட
உடன் இருந்து இடர் வராது காக்க வேண்டும்
கலைகளுக்கு அதிபதியே வாருமம்மா
கடலலை போல் கவிமழையை பொழியுமம்மா
தளமதுவாம் குமுக்கன் பதியில் வாழும்
அம்மையே கருமாரி அருள் செய்வாயே!



2. உறவுகள் எல்லோரும் ஒன்று கூடி
உகந்தை மலையானிடம் ஆசிபெற்று
ஆதவன் மறைகின்ற நேரமம்மா
அடியார்கள் கிணற்றடி வந்தோமம்மா
நிழலே இல்லாத இடந்தானம்மா
நிம்மதியாய் உறங்கி வாறோமம்மா
தளமதுவாம் குமுக்கன் பதியில் வாழும்
அம்மையே கருமாரி அருள் செய்வாயே!



3. வாருமம்மா கருமாரி எங்கள் முன்னே
வருந்துகிறோம் பெரும் வறுமையாலே
தாயே நீ இரங்கிடுவாய் உன்பிள்ளை போலே
தயவு கூர்ந்து கண்திறந்து பாருமம்மா
தீர்த்திடுவாய் வறுமை பிணி குறைகளெல்லாம்
திடமாக வாழ்வதற்கு வழியும் தாருமம்மா
தளமதுவாம் குமுக்கன் பதியில் வாழும்
அம்மையே கருமாரி அருள் செய்வாயே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. காலை மாலை உன் புகழை பாடி வந்தேனம்மா
கண்ணெதிரே உருமாறி வந்து நின்றாய்
மாயையின் சூழ்ச்சியால் தாயே நானும்
மதியாமல் போனேனே அன்று உன்னை
தூக்கத்தில் சென்றேனே தாயே நானும்
தூயவளே கருமாரி காட்சி தந்தாயம்மா
தளமதுவாம் குமுக்கன் பதியில் வாழும்
அம்மையே கருமாரி அருள் செய்வாயே!



5. தேடியே உன்னை நான் அலைந்தேனம்மா
தேகமெல்லாம் உன்நினைவே ஓடுதம்மா
காடெல்லாம் அடியாரின் ஓசையம்மா
கருமாரி எழுந்து நீ வாருமம்மா
எண்ணவே முடியாத கூட்டமம்மா
எழிலரசி எழுந்து நீ பாருமம்மா
தளமதுவாம் குமுக்கன் பதியில் வாழும்
அம்மையே கருமாரி அருள் செய்வாயே!



6. விலங்குக்கு பெயர் போன பூமியம்மா
வித்தகியே அடியாரைக் காருமம்மா
துர்க்கையே உன் பெயர் கேட்டாலம்மா
துன்பங்கள் பறந்து போகுமம்மா
எல்லோரும் உன் நினைவில் வாறோமம்மா
ஏகாந்த நாயகியே இரங்குமம்மா
தளமதுவாம் குமுக்கன் பதியில் வாழும்
அம்மையே கருமாரி அருள் செய்வாயே!

7. காலத்தை வீணாக கழித்தேனம்மா
கருமாரி உன்னையே மறந்தேனம்மா
அடிமேல் அடிவைத்து வாறோமம்மா
அழியாத செல்வத்தை தருவாயமம்மா
மாலை கழுத்தினிலே போட்டேனம்மா
மாற்றிடுவாய் எங்களது வாழ்வையம்மா
தளமதுவாம் குமுக்கன் பதியில் வாழும்
அம்மையே கருமாரி அருள் செய்வாயே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. வாழ்வோ வறுமையில் போகுதம்மா
வருந்தியே வருகிறோம் தாயே நானும்
இரங்கியே எங்களுக்கு தாயே நீயும்
எப்போதும் துணையாக வாருமம்மா
மாறாத கவலை எல்லாம் மாற்றிடவே
மாதாவே மனமிரங்க வேண்டுமம்மா
தளமதுவாம் குமுக்கன் பதியில் வாழும்
அம்மையே கருமாரி அருள் செய்வாயே!



9. குங்குமத்தை கொடுப்பவளும் நீயே அம்மா
குடும்பத்தை காத்திடவே வேணுமம்மா
ஏழ்பிறப்பு எடுத்தாலும் தாயே நானும்
எழிலரசி உன்புகழ் பாட வேண்டும்
தூயவளே கருமாரி மனமிரங்கி
துயர் துடைத்து மக்களை நீ வாழவைப்பாய்
தளமதுவாம் குமுக்கன் பதியில் வாழும்
அம்மையே கருமாரி அருள் செய்வாயே!



10. மலைவேம்பில் பூத்தவளே மாரித்தாயே
மலையரசி நாயகியே வாருமம்மா
அகிலத்தை காப்பதற்கு தாயே நீயும்
மாரியாய் பேச்சியாய் காளியானாய்
உன் புகழ் சொல்லவே வார்த்தை இல்லை
உயிர்த்துணை எப்போதும் நீதானம்மா
தளமதுவாம் குமுக்கன் பதியில் வாழும்
அம்மையே கருமாரி அருள் செய்வாயே!

11. ஊஞ்சல் போல் ஆடுகின்ற வாழ்வை நம்பி
உலகத்தில் திரிந்தேனே பறவை போல
கடவுளை எப்போதும் மதித்தேனில்லை
கடமைகளை அடியோடு மறந்தேனம்மா
ஆசைக்கு அடிமையாகி போனதாலே
ஆதரவு இன்றியே வாடுகின்றேனம்மா
தளமதுவாம் குமுக்கன் பதியில் வாழும்
அம்மையே கருமாரி அருள் செய்வாயே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. காடுமலை வயல்களெல்லாம் கடந்துதாயே
கருமாரி உன்தலத்தை சேர்ந்தோமம்மா
பொங்குகின்ற நதிதனிலே நீருமாடி
பூசை புனக்காரமெல்லாம் செய்துவைத்து
பகலிரவாய் உன்தலத்தில் கழித்தோமம்மா
பார்வதியே மனமிரங்கி வாருமம்மா
தளமதுவாம் குமுக்கன் பதியில் வாழும்
அம்மையே கருமாரி அருள் செய்வாயே!



13. ஆசையுடன் அடியவர் நீராடவென்று
அழகான நதிவெள்ளம் ஓடுதம்மா
பேசுகின்ற தெய்வமாய் தாயே நீயும்
பெருமரச் சோலையில் அமர்ந்தாயம்மா
வீசுகின்ற தென்றலும் தாயே உந்தன்
தெவிட்டாத இன்பத்தை தந்தாயம்மா
தளமதுவாம் குமுக்கன் பதியில் வாழும்
அம்மையே கருமாரி அருள் செய்வாயே!



14. வேப்பிலையில் வாழ்பவளே மாரியம்மா
வேதனைகள் தீர்க்கவே வாருமம்மா
உற்றதொரு அன்னையும் நீதானம்மா
குற்றம்குறை வராமல் காருமம்மா
சாம்பிராணி வாசகியே வாருமம்மா
சாம்பவியே எப்போதும் அருள் தாருமம்மா
தளமதுவாம் குமுக்கன் பதியில் வாழும்
அம்மையே கருமாரி அருள் செய்வாயே!

15. கண்ணிரெண்டை மூடியே சாபம் பெற்று.
மண்ணுலகம் வந்தவளே மாரியம்மா
முனிவர்கள் தேடும் பரம் பொருளும் நீதானம்மா
கருமாரியாய் உருமாறி வந்தவளும் நீதானம்மா
அன்பர் மனம் அறிந்தவளும் நீதானம்மா
அடியார்க்கு எப்போதும் அருளுமம்மா
தளமதுவாம் குமுக்கன் பதியில் வாழும்
அம்மையே கருமாரி அருள் செய்வாயே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. பாலர்களும் முதியவரும் கூட்டமாக
பார்வதியே உன்தலத்தை பாருமம்மா
கன்னியர்கள் வேண்டுகின்ற குங்குமத்தை
கருமாரித் தாயாரே தாருமம்மா
துர்க்கையாய் பத்தினியாய் கருமாரியாய்
துயர்துடைக்க வந்தவளும் நீதானம்மா
தளமதுவாம் குமுக்கன் பதியில் வாழும்
அம்மையே கருமாரி அருள் செய்வாயே!



17. கமகம என்று மணக்குதம்மா சந்தனவாசம்
கருமாரி உருமாறி வாருமம்மா
சல சல என்று ஓடுதம்மா நீருவி
நீராடும் அடியாரை பாருமம்மா
விளக்கேற்றும் மாதரோ கூட்டமம்மா
வித்தகியே எழுந்து நீ வாருமம்மா
தளமதுவாம் குமுக்கன் பதியில் வாழும்
அம்மையே கருமாரி அருள் செய்வாயே!



18. நேர்த்தி வைத்த அடியார்கள் கூட்டமம்மா
நேராக உன்தலம் வந்து தாயே
பொங்கலோடு அவல் கடலை கூழுமம்மா
போசனங்கள் வகை வகையாய் செய்து வைத்து
நீராலே அபிசேகம் செய்தோமம்மா
நீலவிழியாளே எழந்து வாருமம்மா
தளமதுவாம் குமுக்கன் பதியில் வாழும்
அம்மையே கருமாரி அருள் செய்வாயே!

19. அன்னையே கருமாரி பரமேஸ்வரி
அடியாரை காத்திடவே வந்தாய் தாயே
தக்கனது மகளாக பிறந்துமம்மா
தர்க்கமே செய்திட துணிந்தாயம்மா
தன் கணவன் அவமானப்பட்ட போது
தன்னையே அக்கினிக்கு கொடுத்தாயம்மா
தளமதுவாம் குமுக்கன் பதியில் வாழும்
அம்மையே கருமாரி அருள் செய்வாயே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. நீரோடை கடப்பதற்கு தாயே நாங்கள்
நீள் கயிறு கட்டி வைத்தாயே அம்மா
மனப்பாரம் உந்தனிடம் இறக்கி வைத்து
மால்மருகனை காண்பதற்கு தாயே நாங்கள்
தலையின் மேல் பாரத்தை சுமந்து கொண்டு
தாயாரே உந்தனிடம் ஆசி வேண்டியம்மா
தளமதுவாம் குமுக்கன் பதியில் வாழும்
அம்மையே கருமாரி அருள் செய்வாயே!

21. பொன்னான பாமாலை சூடவென்று
பொழுதெல்லாம் உன்நினைவில் இருந்தேனம்மா
பற்பல இடர்கள் வந்த போதும்
பத்தினியே அத்தனையும் மாற்றித்தந்தாய்
குற்றம் குறையிருந்தாலும் தாயே நீயும்
அடியேனை மன்னிக்க வேண்டுமம்மா
தளமதுவாம் குமுக்கன் பதியில் வாழும்
அம்மையே கருமாரி அருள் செய்வாயே!

நன்றி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளியம்மா

வடிவேலன் அருள் பெற்ற வள்ளியம்மா
வருகின்ற அடியாரோடு வலம் வருவாய்
சிறு பானை அடுப்பேற்றி அரிசிடுவாய்
சிந்தாமல் சிதறாமல் அமுதிடுவாய்
அணி அணியாய் அமுது பெறும் அடியாரம்மா
அள்ள அள்ள குறையாத அமுதமம்மா
தேனீரோடு தேனமுது கலந்திடுவாய்
தேகமெல்லாம் சுகம்பெற வைத்திடுவாய்
பெயரிலே வள்ளி அதனாலே வேலவன்
உனக்கு தந்தானம்மா அருள் அள்ளி
என்றென்றும் போற்றிடுவோம் வள்ளியம்மாவை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

அன்னையின் அடியார்களே.

தேவி வேற்கன்னியான கருமாரியம்மன் தான் ஈசானிய பாதத்தில் அமர்ந்து அந்தரக் கன்னியாக ஆகாயக்கன்னியாக காடு மலை நதி இவற்றுள் எழுந்தருளி பின்னர் மூன்று பேர் மீன்கன்னிகளாக மாறி காமக்கன்னி விசாலக் கன்னியாக ஏழுருக்கொண்டு அடியார்களுக்கு அருள்புரிவதாக ஐதீகம்.

எனவே அன்னை கருமாரி அம்மன் புகழ் மாலையினை எழுதக் கிடைத்தது பெரும் பாக்கியமாக நினைப்பதோடு இப்பாமாலையினை வெளியிடுவதற்கு எங்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும். ஆனால் எங்களின் பெயர் நூலில் எழுதவேண்டாம் என சில அடியார்கள் வேண்டினார்கள்

இப்பாமாலைய்யினை வெளியிடுவதற்கு உதவி புரிந்த அடியார்கள் அனைவருக்கும் எல்லாம் வல்ல கருமாரியம்மன் அருள் கிடைக்க வேண்டுமென வேண்டிக் கொள்வதோடு. அனைவருக்கும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வணசிங்கா பிரிண்டர்ஸ், திருமலை வீதி, மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org